RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
OPEN ACCESS

# பேசா மடந்தையின் பேசும் மனம்!

அ. அபி [அ, *], அ. சிரிஷா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை -32, இந்தியா

# A Silent Women's Eloquent Mind

A. Abi [a, *], D.A. Sirisha [a]

[a] PG Tamil & Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamilnadu, India

* Corresponding Author: tamilbharathi1599@gmail.com

Received: 14-12-2025
Revised: 26-02-2026
Accepted: 12-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**
When we think of the epic Ramayana, many characters are registered in our minds, a few are Rama, Ravana, Surpanakha and Kaikeyi. Similarly, Sita also comes to our mind. However, unlike the other characters, she is often portrayed in many places as a woman who is lost, a remnant of patriarchal oppression, and the last descendant of a matriarchal society. Rajam Krishnan, through her writings, presents before us another dimension of Sita that no one has seen before. Even in times when the actions of female characters like Surpanakha, Kaikeyi, and Kooni, who are pivotal in the story, were justified and their inner feelings and perspectives were discussed, Sita largely remained a neglected character. Whether Rama understood Sita's heart or not, Rajam Krishnan has understood it well, and her writings reveal this to us.

**Keywords:** Rajam Krishnan, Vanadeviyin Maindhargal, Kambaramayanam, Seedhai, Feminism.

## முன்னுரை

இராமாயணம் என்ற மாபெரும் காவியத்தைப் பற்றிப் பேசும் பெரும்பாலானோர் இராமனின் பெருமையை, வீரத்தைப் பறைசாற்றும் ஒன்றாகவே பார்க்கின்றனர். அப்படிப்பட்ட மாபெரும் அவதாரப் புருஷனின் வீரத்தை நிலைநாட்ட, ஒரு பெண்ணின் வாழ்வு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது; அது எங்கும் பேசப்படுவதேயில்லை. அதற்கான காரணமாய் வர்ணாசிரமக் கொள்கைகள் அமைகின்றன. சீதையின் பார்வையில் என்னென்ன கேள்விகள் தோன்றுகின்றன, அவளின் மனக்குமுறல்கள் என்னவாக இருந்தது என்பதன் அடிப்படையில் அமைந்ததே வனதேவியின் மைந்தர்கள் என்னும் நூல்.

## இராமன் மீதான சீதையின் சந்தேகம்

கம்பரின் சீதை பேசாத இடங்களிலெல்லாம், இராஜம் கிருஷ்ணனின் சீதை பேசுகிறாள். இந்நாவல் முழுவதுமே அவளது புலம்பல்களாக, அவளின் உள்ளத்தில் எழும் நியாயமான கேள்விகளைத் தாங்கியதாக உள்ளது. இந்தக் கேள்விகளையெல்லாம் கம்பராமாயணச் சீதை கேட்டிருந்தால் நீதி அன்றே கிடைத்திருக்கும். இந்நூலில் அவள், மன்னர்கள், சத்திரியர்கள் பல பெண்களைத் தீண்டுவது பெருமையென்றே நினைக்கின்றனர்; எனவே, நான் இராமனைச் சந்தேகப்படக்கூடாதா? என்னும் கேள்வியை அவந்திகாவிடம் கேட்கிறாள். இதை இராமனிடம் கேட்டிருந்தால் கம்பர் சீதையோடு இராமனையும் தீயில் இறங்க வைத்திருப்பாரா? சீதை பெண் என்பதால்தனே அவள் சந்தேகிக்கப்பட்டாள். இதை இன்றைய காலத்தோடும் ஒப்பிட்டு நம்மால் பார்க்க இயலும். இன்றும் பெண்ணின் குணம் எளிதில் கேள்விக்குள்ளாக்கப்படுவதே இதற்குச் சான்று.

மேலும், மகாராணி (அ) குலகுரு சொன்னால்தான் தன் மனைவியைப் பார்க்க வருவாரோ? அதைக்கூடப் பிறர்தான் நினைவூட்டல் வேண்டுமோ? மன்னருக்கு சுயசிந்தனை இல்லையா? எனக் கேள்விக் கணைகளைத் தொடுக்கிறாள். ஆனால், இதற்கெல்லாம் பதில்கள்தான் இல்லை. இராணியாக

இருந்தாலும் சரி, சராசரிப் பெண்ணாயினும் சரி, தன் கணவன் தன்னோடு நேரம் செலவிட வேண்டுமென நினைப்பர். அதிலும் ஒரு கருவைச் சுமக்கும் பெண்களுக்கு இந்த எண்ணம் மேலிடல் என்பது இயல்பே. இதற்கு சீதையும் விதிவிலக்கல்ல என்பதை இராஜம் கிருஷ்ணன் சீதையின் மூலமாகவே கூறியுள்ளார்.

## இராமனின் காரணங்கள் நியாயமானதா?

தாய், தந்தை யாரெனத்தெரியாத ஒரு பெண் குழந்தையை சனகன் எடுத்து வளர்க்கிறார். ஆனால், இப்படிப்பட்ட பெண்ணை எந்த அரச குமாரன் திருமணம் செய்துகொள்வான் என மனம் வெதும்பும் நேரத்தில்தான் சுயம்வரம் நடத்தத் தீர்மானிக்கிறார். இராமன் அதில் வென்று சீதையைக் கரம்பிடிக்கும்போது, சனகன், "தாய் - தந்தை, குலம் கோத்திரம் தெரியாத உன்னை அயோத்தி மன்னர் ஏற்றுக்கொண்டதே பெருமைக்குரிய செயல்" [1] எனக் கூறுகிறார். இக்கூற்றின் மூலம் சீதையின் பிறப்பு பற்றிய செய்திகள் இராமனுக்குத் தெரியுமென்பது புலப்படுகிறது.

மேலும் இதை உறுதிசெய்யும் விதமாக, மற்றொரு நிகழ்வும் கூறப்பட்டுள்ளது. மூத்த மகாராணியின் மாளிகைப் பணிப்பெண்ணான ஜலஜை என்பவள் இராமனிடம், "பெற்றவரால் மறுக்கப்பட்டு, குலம் கோத்திரம் அறியாதவளுக்காக மன்னர் வருத்தப்படலாமா? அப்படி உயர்குல மங்கையாக இருந்தால் அரக்கர் வேந்தனுடன் தேரில் சென்று இறங்கும்வரை உயிர் தரித்திருப்பாளா? அவள் உயர்குல மங்கையாக இருந்தால் உங்களுடன் கானகம் ஏகி, அங்கும் உங்களுக்கும் உங்கள் இளையவருக்கும் அவளைப் பாதுகாக்கும் பெருஞ்சுமையை வைத்திருப்பாளா?" [2] எனக் கேட்கிறாள். ஆக, பனிப்பெண்கூட சீதையின் பிறப்பைப் பற்றி, அவளின் கணவரான மன்னரிடமே குறைகூறுமளவு அது விவாதப்பொருளாய் இருந்தது தெரிகிறது.

இதனால்தான், அரக்கன் கோனிடமிருந்து அவளை மீட்டபின் அவள்மீது இராமனுக்குச் சந்தேகம் ஏற்பட்டதோ? அவள் தீயில் இறங்கும்போதும் அமைதி காத்தானோ? என எண்ண வேண்டியுள்ளது. ஒருவேளை சீதை சனக மன்னரின் மகளாய் இருந்திருந்தால் (அ) வேறொரு அரச மரபில் பிறந்தவளாய் இருந்திருந்தால், நாட்டு மன்னனோ, குடிமக்களோ இப்படியான கடுஞ்சொற்களை வீசியிருக்கமாட்டார்கள்.

## பெண்களின் சிறை

தன் பிறப்பைப் பற்றிய கேள்விகளை மட்டுமல்லாது, பிற சத்திரிய தர்மங்கள் மீதும் சீதைக்குக் கேள்விகள் எழுகின்றன. "ஜனஸ்தானக் காட்டில் அரக்கர்கள் இருந்தால் இவர்களுக்கென்ன? அவர்களும் காட்டிலே எதையேனும் கொன்று தின்று வாழ்ந்துவிட்டுப் போகிறார்கள்? மகரிஷிகள்! சாபம் இட்டுவிடுவார்கள் என்று இந்த மன்னர்கள் நடுங்குவதாம்! இவர்கள் எதற்காக ஆயிரக்கணக்கில் உயிர்வதை செய்யும் யாகங்கள் நடத்த வேண்டும்?" [3] என்றெல்லாம் தனக்குள்ளாக யாகங்கள் பற்றி எண்ணுவதாக இராஜம் கிருஷ்ணன் கூறுகிறார்.

இதையடுத்து சீதையின் மனதில் தோன்றும் வினாவாய் அவர் கூறுவதுதான் மிக முக்கியமான பெண்ணியக் கருத்தாய் இந்நூலில் அமைந்துள்ளது. "மன்னரின் மாளிகைப் பஞ்சணைகள் முள் முடிச்சுகள் நிரம்பியவை. அந்தப் பளபளக்கும் பட்டு மென்மைகளும் ஒளியும் குளிர்ச்சியும் கூடியவை அல்ல. மனிதருக்கு மனிதர் வேலிபோடும், தனிமைப்படுத்தும் முட்கள்... அரக்கர் வேந்தனின் மாளிகைத் தோட்டம் மட்டுமே சிறையன்று. மன்னர் குடிகள் எல்லாமே பெண்களுக்குச் சிறைதான்..." [4] என்பதே அது. ஒரு பெண் தான் நினைத்தவாறு சுதந்திரமாய் இருக்கமுடியாவிட்டால் அது எத்தனை பெரிய வசதிகள் நிறைந்த இடமாயிருந்தாலும் அது அவளுக்கு சிறையே. சீதையின் இந்த நினைவானது இராமனின் அரண்மனையில் இருப்பதும் அரக்கர் கோனிடம் சிறைப்பட்டிருப்பதும் ஒன்றே; அதாவது, அடிப்படையில் ஆண்கள் அனைவரும் ஒன்றுதான் என்பதே அவளின் கருத்து என்பதைத் தெளிவாகிறது.

## முடிவுரை

கம்பரின் இராமாயணத்தில் சீதையின் மனதில் தோன்றாத (அ) தோன்றியதை வெளிப்படையாகக் கேட்காத சீதையின் மனதை இராஜம் கிருஷ்ணன் உலகறியச் செய்துள்ளார். வர்ணாசிரமக் கொள்கை என்பது எவ்வளவு கொடூரமானது, அது மனித மனதை ஆட்கொண்டால் விளைவுகள் எவ்வளவு மோசமானதாக அமையும் என்பதையெல்லாம் அவர் மிகத் தெளிவாக எடுத்தியம்புகிறார். சத்திரிய குலத் தர்மங்களையும் கேள்விக்குள்ளாக்குகிறார். ஒரு மனிதரைப் பிறப்பால் உயர்வு தாழ்வின்றி மனிதராக, சக உயிராகப் பார்ப்பது ஒன்றே இப்படியான அநீதிகளுக்குத் தீர்வாகும்.

## References

ராஜம் கிருஷ்ணன், (2001) வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம், சென்னை.

ராஜம் கிருஷ்ணன், (2007) வனதேவியின் மைந்தர்கள், தாகம் பதிப்பகம், சென்னை.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License